ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# இலக்கியங்கள்கூறும் வெறியாடல்களின் தொடர்ச்சி

**மேரி மாகிறேற் சூசை & முனைவர். லட்சுமி ராமசாமி**
**இசை மற்றும் நுண்கலை துறை**
**வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை**

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு சமூகத்தின் நம்பிக்கைகளினதும், எதிர்பார்ப்புக்களினதும் எண்ணப்பதிவுகள் காலம் காலமாக சடங்குகள் வழிபாடுகள் ஊடாக கடத்தப்பட்டு வருகின்றன.

காலங்காலமாக அரசியல், சமூகங்களின் மாற்றங்களால் சடங்குகளும் வழிபாடுகளும் அதன் உரு மாற்றங்களக் கூட்டியோ குறைத்தோ பெற்றுக்கொண்டபோதும் அவை முற்றாக அழிந்தொழிந்துவிடவில்லை. இதற்கு இன்றய சடங்குகள், வழிபாடுகளில் காணப்படும் வெறியாடல்களும் அதனையொட்டிய படையல்களும், பலியிடல்களும் முன் உதாரணமாக உள்ளன. சடங்குகள், வழிபாடுகளில் இன்று வரையிலான வெறியாடலின் தொடர்ச்சியினை முன்னிலைப்படுத்தி இவ் ஆய்வுக்கட்டுரையானது அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

வெறியாடல், பூசாரி, அணங்கு, சடங்குகள், நம்பிக்கை, அகமரபு, புறமரபு.

**முன்னுரை**

சங்ககாலத்தில் இருந்து இன்றுவரை மனித உளவியல் போக்கானது விடை காண முடியாத விடயத்திற்கு உண்மைக்கும், பொய்க்கும் புறம்பே தற்காலிக தீர்வை,(பரிபாடல். 5 : 11- 21) நிம்மதியை மக்களுக்கு வெறியாடல் போன்ற சடங்குகள் மூலம் அளித்து வருகிறது. இதுவே இதன் மரபுரீதியான பேணுதலுக்கும் இன்று வரையிலான தொடர்ச்சிக்கும் காரணமாக இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

சங்க இலக்கிய மேல் கணக்கு கீழ்க் கணக்கு நூல்களில் வெறியாடல்கள் பற்றிய தகவல்களை அக, புற இலக்கணக் கூறுகளுடன் அறிய முடியுமாகவுள்ளது. அண்ணளவாக ஐம்பதுக்கு மேற்பட்ட வெறியாடல் பாடல்களைக் காணமுடிகிறது. தவிரவும் பஞ்சமரபு, சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம் போன்ற நூல்களிலும் வெறியாடல்களுக்கான தகவல்களைப் பெறமுடியுமாகவுள்ளது.

சங்ககால மக்கள் நோய்களின் காரணத்தை அறியவும், நோயை குணப்படுத்தவும், எதிர்காலம் பற்றி அறியவும். மற்றவர்களின் எண்ணக்குறிப்பை அறிந்து கொள்ளவும், போரின் வெற்றி குறித்து அறிந்து கொள்ளவும் என பல்வேறு பட்ட காரணங்களுக்காக வெறியாடலை மேற்கொண்டனர்.

**அகமரபு**

தலைவனின் காதல் பிரிவால் தலைவி ஏங்குகிறாள். அவளின் மனவருத்தம் உடல் நோயாக வெளிப்படுகிறது. நற்தாயும், செவிலித்தாயும் அவளின் வெளித்தோற்ற

மாறுதல்களை கண்டு கொள்கின்றனர். தன் மகளை நோயில் இருந்து குணப்படுத்த முதல் கட்டமாக குறி கேட்டு அல்லது வேறியாடல் மூலம் கழங்கு பார்த்து தலைவியின் நோய்க்கு காரணத்தை கண்டறிகிறார்கள்.

‘’’ பெய்ம்மணல் வரைப்பில் கழங்கு படுத்து, அன்னைக்கு,

'முருகு' என மொழியும் வேலன்; மற்று - அவன்

வாழிய - இலங்கும் அருவிச்

சூர் மலை நாடனை அறியாதோனே ‘’

(ஐங்குறுநூறு : 249)

இப்பாடலில் குறிக்கப்படும் வேலன், பூசாரியாவார். முருகனின் குறியீடாக வேலைக் கையில் ஏந்தி வெறியாடுவதால் வேலன் என்று அழைக்கப்பட்டான் போலும். கழங்குக் காய்களைப் பரப்பி தெய்வத்தை முன்நிறுத்தி அதைக் கையில் எடுத்து எண்ணும் பொழுது ஒற்றை எண்ணிக்கையாகவோ இரட்டை எண்ணிக்கையாகவோ இருந்தால் பூசாரி அதற்கு ஏற்றாற் போல் விளக்கம் எடுத்துச் சொல்லுவார். ( உரையாசிரியர்கள் மத்தியில் கழங்கு பார்க்கும் முறை பற்றி பல் வேறுபட்ட கருத்தாடல்கள் உண்டு) இது ஒருவகை குறி சொல்லலாகும். கழங்கு பார்த்து தலைவிக்கு முருகனால் நோய் வந்தது என வேலன், அன்னைக்குக் குறி சொல்கிறான். அருவி பாயும் அச்சம் தரக்கூடிய மலைநாட்டின் தலைவன் தலைவியின் காதலன் அதை வேலன் அறியான், என்று நோய்க்கு உரிய காரணத்தை அன்னைக்கு தோழி உரைப்பதாக இப்பாடல் அமைகிறது. இப் பாடல் மூலம் வெறியாடி வேலன் குறி கூறுவதை அறிய முடிகிறது. இது போல் நெல் மணிகள் பரப்பி அதை எண்ணி எடுத்து பரப்பி கட்டுவிச்சிகள் குறி கூறும் வழக்கங்களும் உண்டு. கட்டுக்கேட்டல் என்னும் செயலும் அச்சொல்லாடலும் நம் மத்தியில் இன்றும் உள்ளன.

வெறியாடலில் அணங்கு அணுகியது என வேலன் உரைக்க வெறிக்களம் அமைத்து படையலிட்டு மறியறுத்து வெறியாடலுக்கு ஏற்பாடு செய்கின்றனர்.

‘’………………… வேலன் வந்தென,

பின்னு விடு முச்சி அளிப்பு ஆனாதே;

பெருந் தண் குளவி குழைத்த பா அடி,

இருஞ் சேறு ஆடிய நுதல, கொல்களிறு

பேதை ஆசினி ஒசித்த

வீ ததர் வேங்கைய மலை கிழவோற்கே?

(நற்றிணை : 51)

தலைவியானவள் தலைவன் தன்னைக் காண இரவில் வரும் வழியில் அவனுக்கு நேரும் இடர்களை எண்ணி வருந்தினாள். அதனால் அவளின் உடல் மெலிவுற்றது. அவளின் உடல் மாற்றத்திற்கான உண்மை நிலை அறியாத அன்னையானவள்

வெறியாடலுக்கு ஏற்பாடு செய்கிறாள். ஒளி பொருந்திய வேலை ஏந்திய வேலன் வந்தான். தலைவியின் கூந்தலின் உச்சியில் இருந்த மலரை கலைத்து பரவுக்கடன் கொடுத்தான்.( வெறியாடலில் இச்செயற்பாடு பரவுக்கடன் என்று கூறப்படுகிறது )

தொல்காப்பியர் வெறியாடலின் அகமரபுக்குரிய இலக்கண விதியை செவிலிக் கூற்றில் இவ்வண்ணம் கூறியுள்ளார்.

''…………………………………………..
கட்டினுங் கழங்கினும் வெறியென விருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்
…………………………….. ''

( தொல். பொரு. 115)

வெறியாடல் மூலம் மற்றவர்களின் எண்ணக்கருத்தினை அறிந்து கொள்வதற்கான முயற்சியினைக் கீழ் வரும் பாடல் எடுத்துரைக்கிறது

'' வேறா நின்னை வினவுவேன் தெய்வத்தால்
கூறாயோ கூறும் குணத்தினனாய் – வேறாக
என் மனைக்கு ஏறக் கொணருமோ எல்வளையைத்
தன்மனைக்கே உய்க்குமோ தான்…. ''

(திணைமாலை நூற்றைம்பது. 90)

களவொழுக்கத்திற்கு இடையூறு ஏற்படவும் தலைவியை தலைவன் தன்னுடன் அழைத்துச்சென்று விடுகிறான். இதனால் தாயானவள் மிகவும் வருந்துகிறாள். தன் மகள் தலைவனுடன் ஊர் திரும்புவதை அறிந்து கொண்ட நற்றாய் வெறியாடலில் வேலனிடம் வினவுகிறாள்; தலைவன் என் மகளை என் மனைக்கு முதலில் அழைத்து வருவானா அல்லது தன் மனைக்கு அழைத்துச் செல்வானா? தலைவனின் எண்ணக் கருத்து எதுவோ? தலைவன் எண்ணக்கருத்தை அறிய தாயானவள் குறி கேட்பதாக பாடல் அமைந்துள்ளது.

நம்மத்தியில் தொலைந்து போன மனிதர்களை, பொருட்களைத் தேடி குறி கேட்கும், கட்டு கேட்கும் வழக்கம் நம்மிடம் இன்றுவரை தொடர்கிறது.

தலைவனின் எண்ணக்கருத்தை அறிவதற்கான வெறியாடலின் அகமரபுக்குரிய இலக்கண விதியை கீழ்வரும் பாடலிலே காணலாம்.

''………………………
பாங்கியர்க்கு உணர்த்தலும் ஆங்கவர் கேட்டு
நற்றாய்க்கு உணர்த்தலும் நற்றாய் கேட்டு அவன்
உளங்கோள் வேலனை வினாதலும் எனவுடன்
விளம்பு இரு மூன்றும் மீட்சியின் விரியே''

( நம்பியகப்பொருள் . 191 )

நம்பியகப்பொருள் கூறும் 'மீட்சியின் வருகை' யில் ஒன்றான 'வினாதலில் கூறப்பட்டுள்ளது.

இதுவரையில் அக மரபுக்கான வெறியாடல்கள் பார்க்கப்பட்டது. இனிவரும் பாடல் ஒன்று புற இலக்கண கூறுகளுடன் வருவதைக் காண்போம்.

**புறமரபு**

''வாலி ழையோர் வினை முடிய

வேல னொடு வெறியா டின்று''

(புற.பொரு.மாலை. வெட்சி: 19)

அழகிய ஆபரணங்களை அணிந்த மறவர் குலப் பெண்கள் தம் கணவரின் போர் வினைகள் வெற்றி பெறவேண்டி வெறியாடலை மேற்கொள்வர். இவ் வெறியாடலை பூசாரியாகி வேலனுடன் கூடி நடத்துவர். இது வள்ளிக் கூத்து என்றும் அழைக்கப்படுகிறது.

போருக்குப் புறப்படும் முன் அரசனானவன் தன் போரின் வெற்றி குறித்து அறிய பல நிமித்தங்களைக் கண்டறிந்து கொள்வான், கூடவும் வெறியடல் மூலம் வேலனிடம் குறி கேட்டுக்கொள்வான் இவ் வெறியாடலில் வேலன் தனித்தே வெறியாடிக் கொள்வான்.

தொல்காப்பியர் வெறியாடலின் புறமரபுக்குரிய இலக்கண விதியை புறத்திணை வழுஏழ் ஆவன எனும் தலைப்பின் கீழ் இவ்வண்ணம் கூறியுள்ளார்

'' வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

வெறியாட்டயர்ந்த காந்தளும்…………''

(தொல். பொருள்.60)

**பஞ்சமரபு கூறும் வெறியாடல்**

பஞ்சமரபு ஆசிரியர் வெறியாடலை கோலம் என்ற நடன வகையில் அடக்கியுள்ளார்.

''அரிய திருத்தாண் டவம்னிறுத்த நாட்டியம்

குரவைவரிப கோலம்வகை கூத்தேழ் – பரவுமிது

…………….''

(பஞ்ச. நிரு.124)

கோலம் என்றால் – வேடம்; வேடம் இட்டு வெறியாடல் ஆடப்படுவதால் கோலம் என்னும் பெயர் பெற்றிருக்கலாமோ என ஊகித்துக் கொள்ள இடம் தருகிறது. சங்ககாலத்தில் பூசாரிகள் பலவிதமாக தம்மை அலங்கரித்தும் வேடம் பூண்டும் வெறியாடல்களை மேற்கொண்டனர்.(வெறியாடலில் வேலனின் அலங்காரம் வரும் பாடல்கள் – நற் : 34. அக :89,138,195. மதுரை : 610 -615) (வெறியாடலில் சாலினியின் அலங்காரம் வரும் பாடல்கள்- வேட்டுவ வரி .22-30) அது போல் இன்றும் வெறியாடலில் வேடம் பூண்டு ஆடுவதை காணக் கூடியதாக உள்ளது.

கோலம் என்னும் நடனம் கேரளாவில் தெய்யம் கோலம் என்று கோயிலைச் சார்ந்த நடனமாக உள்ளது. இலங்கையில் நாட்டார் நடனமாகவும் சிங்கள மக்களிடையே இடம் பெற்று வருகிறது.

**சிலப்பதிகாரம் கூறும் வெறியாடல்**

வெறியாடலாது மரபு ரீதியான தொடர்ச்சியினை சிலப்பதிகார வேட்டுவ வரியில் சாலினி வெறியாடுவதில் காண முடிகிறது.(சிலம். வேட்டுவ வரி.14-21)

நமக்குரிய கொள்ளையடித்தல், திருடுதல் தொழிலைச் செய்யாவிட்டால் கொற்றவை தண்டிப்பாள் என சாலினி வெறியாடிச் சொல்கிறாள். அங்கு கோவலனுடன் நின்ற கண்ணகியை நோக்கி அவள் எதிர்காலம் பற்றி குறிசொல்கிறாள் (சிலம். வேட்டுவ வரி.45-50).இவ் இரு குறிகளின் மூலமும் வெறியாடிக் குறி சொல்லும் மரபு ரீதியான தொடர்ச்சியினைக் காணமுடிகிறது.

சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையில் குறமகளிர் வள்ளியை ஒத்தவள் கண்ணகியென பத்தினி தெய்வமாக கண்ணகியை போற்றுகின்றனர். அவளிடம் தம் தலைவியை தலைவனுடன் சேருவதற்காக வேண்டுகின்றனர்(சிலம். குன்றக் குரவை. 24: 9-20). வேலன் வெறியாடல்களில் அனைத்து தெய்வங்களையும் வணங்கி முருகனை தம்முள் இருத்தி ( உருவேற்றி) ஆவேசித்து வெறியாடிக்கொள்வர். இங்கே முருக வழிபாட்டுடன் பத்தினி தெய்வத்தையும் சமமாக வழிபாடு செய்வதை அறிய முடிகிறது. இது முழு முதற் கடவுளாம் முருகனின் வழிபாடானது இங்கு கிராம தேவதைகளுடன் இணைத்து இடம்பெறுவதைக் காண முடிகிறது.

**நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் வெறியாடல்**

நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் நம்மாழ்வாரால் பாடப் பெற்ற நான்காம் பத்தில் வெறியாடல் பற்றிய 10 பாடல்கள் காணக் கூடியதாக உள்ளது.

பராங்குச நாயகியின் மனநோயைத் தீர்ப்பதற்குக் குறி கேட்பதோ, வேலன் வெறியாடல் எடுப்பதோ மருந்து ஆகாது. அவள் நோயை தீர்ப்பது எவ்வண்ணம் என்று தோழி வழிகளைக் கூறுகிறாள். கண்ணன் மேல் கொண்ட காதலால் இம் மனநோய் எற்பட்டது என்கிறாள். கண்ணண் மேல் பக்தி கொண்டு அவனுக்கான கைங்கரியங்களைச் செய்தால் நோயில் இருந்து விடுபடலாம் என்கிறாள். குறி, வெறியாடல் பற்றிய நம்பிக்கையினைத் தகர்க்கும் வகையில் பாடல்கள் அமையப் பெற்றுள்ளன. ( திரு வாய் மொழி 4-6-1 இருந்து 10 வரை).

பத்து நூற்றாண்டுகளுக்கு மேலான வெறியாடலின் தொடர்ச்சிக்கு நம்மாழ்வாரின் பாடல் வரிகள் சான்றாக உள்ளது.

இன்று வரை வெறியாடல்களும் குறி சொல்வதும் தமிழகத்தில் மரபு ரீதியாக ஆலயங்களிலும் தனியார் இடங்களிலும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

காளி அம்மன் கோவில்களில் பூசாரியாக இருக்கக் கூடியவர்கள் கோயிலில் திருவிழாக்கள் வழிபாடுகள் முடிந்தவுடன் வெறியாடி குறி சொல்லும் மரபு உண்டு. சில கொவில்களில் குறி சொல்வதற்கென்று குறி மேடை அமைக்கப்பட்டிருக்கும். திருச்சிப் பக்கம் சிறுவாச்சூர் மதுர காளியம்மன் கோயிலிலும் பூசாரி வெறியாடுவர்.

வெறியாடலை விழாக்களாக கொண்டாடி வரும் வழக்கமும் இன்றுவரை தமிழகத்தில் பல ஊர்களில் உள்ளது. இவ்விழாவை மயானக் கொள்ளை என அழைப்பர். இது விசேடமாக சிவராத்திரி அன்று நடை பெறும். மயானத்தில் (சுடுகாட்டில்) பெயர் தெரியாத சுதையில் உருவத்தை உருப்படுத்திக் கண்களுக்கு முட்டவைத்து கோரமாக அதை அலங்கரித்துக்கொள்வர். பல படையல் பொருட்களை படைத்து உயிர்பலிகளும் கொடுத்துக்கொள்வர். இரவு நேரத்தில் வழிபாடு நடக்கும். பகல் வேளைகளில் பக்தர்கள் பல்வேறுவகையான நேர்த்திக்கடன்களைச் செய்து கொள்வர். ஆணிச்செருப்புகளை அணிந்து நடந்து செல்வர். உடம்பில் ஊசி குத்திக் கொள்வது போன்ற மிக கொடூரமான பிராத்தனைகளை நிறைவேற்றிக் கொள்வர். இரவு நேரத்தி இந்த வழிபாடு தொடர்ந்து நடை பெறும்.பூசாரி படையலுக்கு உரிய ஆட்டை அப்படியே கடித்து எடுத்துக்கொள்வார். வழிபாடுகளை முடித்துக் கொண்டு காலையில் திரும்புவார்.

காளி, அம்மன் தெய்வங்களுக்கு மாத்திரமன்றி கிராம சிறு தெய்வங்களாகிய வேட்டைக்கருப்பன், காத்தவராயன், மாடசாமி, முனீஸ்வரன் என்று பல தெய்வங்களுக்கு இத்தகைய வழிபாடுகள் நடை பெறுகின்றன. சிவராத்திரிக்கு தெய்வங்களைப் போல் தம்மை அலங்கரித்துக் கொள்வர். தம் கைகளில் ஆடு சேவல்களைப் பலிப்பொருளாக எடுத்துக்கொண்டு செல்வர். பலிப்பொருட்களை வாயில் கடித்துக்கொண்டு ஆவேசமாக ஆடிக்கொள்வர். ஆவேசித்து வெறிகொண்டு ஆடிவருவோர் தம்மை கடந்து போக பக்தர்கள் விரும்புவர். மயானத்தில் கூடி நிற்கும் பக்தர்கள், இவர்களைக் கண்டதும் நிலத்தி படுத்துக்கொள்வர். தெய்வங்களைப் போல் கோலம் பூண்டவர்கள் தம்மேல் கடந்து சென்றால் தம்மை பீடித்துள்ள நோய் குணமாகும் என்றும், பிள்ளை இல்லாதவர்களுக்கு பிள்ளை வரம் கிடைக்குமென்றும் உள்ள நம்பிக்கை இன்றளவும் உள்ளது.

இத்தகைய வழிபாட்டு முறைகள் சேலம், ஏற்காடு போன்ற மாவட்டங்களில் வருடாவருடம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது .

மயானகொள்ளை தவிர்த்து வெறு விதமான வெறியாடல், குறி சொல்லும் முறைமைகள் ஊர்காவல் தெய்வங்களுக்கென சில கிராமங்களில் நடை பெறுகிறது. வேட்டைக்கருப்பன், காத்தவராயன், மாடாசாமி, அய்யனார், முனிஸ்வரன் என பல தெய்வங்களை இவ்வகையில் வரிசைப்படுத்தலாம்.

விழா அன்று இரவு கையில் தீவட்டியும் ஆயுதமும் (வாள் அரிவாள்) ஏந்திக் கொண்டு பூசாரி ஊரைச் சுற்றி வருவார் அவ்வேளை மக்கள் அவர் முன் எதிர்படாது ஒதுங்கி இருப்பர். பூசாரி தன் முன் எதிர்ப்படுபவர்களை தன் கையில் இருக்கும் ஆயுதத்தால் வெட்டிவிடுவார். பூசாரி மருள் வந்து (வெறி) செய்ததால் இது கொலையாக கருதப்பட மாட்டாது. ஊர் சுற்றிவந்த பூசாரி வெறியாடிய நிலையில் குறி மேடையில் அல்லது திட்டில் நின்று குறி சொல்லுவார். தனக்கு காணிக்கையாக அல்லது பலியாக எவை

வேண்டும் என்று கேட்பார், தொடர்ந்து ஊர் நன்மைக்காகக் குறி சொல்வார். இந்த மரபு கிராம தேவதைகளின் விழாக்களில் இன்று வரை காணக்கூடியதாக உள்ளது.

விலங்குகளை பலி கொடுப்பதும் உணவு வகைகள், மது, சுருட்டு படைப்பது என்பதும் தேவதைகளுக்கு ஏற்ப வேறுபடுகின்றது. இந்த வழிபாடுகளை அந்தணர் நடத்துவதில்லை மாறாக சாதாரண மக்களே பூசாரியாக செயல்படுவர்.
இலங்கையில் மட்டக்களப்பு பகுதியின் பூர்வீக குடிகளென கருதப்படும் வேடர்களிடம் காணப்படும் குமார வழிபாடு (சடங்கோடு கூடிய ஆடல்) வேலன் வெறியாடலுடன் ஒத்த நிலையில் உள்ளது.

பந்தலிட்டு இலை, குழை தென்னை ஓலை, காட்டுப்பூக்கள் ஆகியவற்றால் பந்தலை அலங்காரம் செய்து பூசையை இரவு நேரத்தில் நடத்துவர். குமார பூசை நடைபெறும் சமயம் தெய்வத்தோடு சம்பந்தமுடைய பல நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டுவர். இவை வேலன் வெறியாடலில் பூசாரி வேலன் போல் வேடம் தரித்து வெறியாடலை நடத்துவதை நினைவூட்டுகிறது.
வேடபாசையில் பாட்டு பாடப்பட்டு கொட்டு எனப்படும் பறை கொட்டப்படும். வேலன் வெறியாடல் போல் பூசாரியே தெய்வமேறி ஆடுவார். இவர்கள் பலியிடுவதில்லை பதிலாக கும்பக் குடங்களைக் கொத்தி வீழ்த்துவர்.
வேடர் பல இடங்களில் பரவலாக வாழ்கின்றனர். தாம் வாழும் இடங்களில் ஒரு குமரக் கோவிலை வைத்திருப்பர். கிராமத்தில் அல்லது காட்டு மத்தியிலுள்ள மரம் ஒன்றே கோவிலுக்குரிய நிலையாகும் . இவை கூட சங்க கால பாமர மக்களின் வழிபாட்டுத் தடங்களினை ஒத்த நிலையில் காணப்படுகிறது.

**முடிவுரை**

சிவன், விஷ்ணுவும் பெருந்தெய்வங்களாக தென்னிந்தியாவில் கொண்டாடப் பட்ட போதிலும் கிராம தேவதைகளே கிராமமக்கள் வாழ்வில் இரண்டறக் கலந்திருந்தனர்.

சிவன், விஷ்ணு கடவுளர் பிரபஞ்சங்களுடன் தத்துவார்த்த பிரதிபலிப்புக்களாக பார்க்கப்பட்டனர். இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் தெய்வங்களாக எண்ணப்பட்டனர். கிராம மக்கள் இது பற்றிய சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு வாழ்ந்தனர். கொள்ளை நோய் அம்மை, குழந்தைப் பேறு, பேய்பிடிதல், கால்நடைகளுக்கு வரும் நோய், பிணிகள், இயற்கையின் சீற்றம் என தம் அன்றாட பிரச்சனைகளுக்கு விடுதலை தரக்கூடிய தெய்வங்களாக கிராம தெய்வங்களை நம்பினர். தமது உலக வாழ்க்கைத் தேவைகளுடன் உறவுபடுத்திப் பார்த்தனர். கிராம தேவதைகள், மூதாதையர் கோபத்தினால் இன்னல்கள் வருவதாக நம்பினர். எனவே கிராம தேவதைகள் சமாதானப்படுத்தவும் அவர்களுடன் ஒப்புரவாகவும் வழிபாடுகள் விழாக்களை மேற்கொண்டனர்.

இலக்கியங்கள் கூறிய பல நிகழ்வுகளின் தொடர்ச்சிகள் மரபு ரீதியாக சடங்குகள், வழிபாடுகள் ஊடாக நம் வாழ்க்கையில் தொடர்கின்றன

**உசாத்துணை நூல்கள்:**

பரிபாடல் மூலமும் உரையும் – முனைவர் பெ. சுப்பிரமணியன்,முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன், முனைவர் அ.தட்சினாமூர்த்தி. நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், ஐந்தம் பதிப்பு 2013.

ஐங்குற்னூறு மூலமும் உரையும் – முனைவர் அ. தட்சினாமூர்த்தி, நியூ. செஞ்சுரி புக் ஹவுஸ் முதல் பதிப்பு 2004.

நற்றிணைமூலமும் உரையும் – முனைர் கு. வெ. பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் முதல் பதிப்பு 2004.

தொல்காப்பியம் பொருளதிகாரம் உடையாசிரியர் நச்சினார்க்கினியார், சாரதா பதிபாகம் முதல் பதிப்பு 2018.

நம்பியகப்பொருள் மூலமும் விரிவுரையும்- விரிவுரை ஆசிரியர் வ.த. இராமசுப்பிரமணியம் எம். ஏ, முல்லை நிலையம் மறுபதிப்பு 2019.

ஐயனாரிதனார் அருளிய புறப்பொருள் வெண்பாமாலை- தெளிவுரை புலியூர்க் கேசிகன்,பாரினிலையம் மறு பதிப்பு 2019.

பஞ்சமரபு மூலமும் உரையும் – உரையாசிரியர் முனைவர் வீ. ப. கா. சுந்தரம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1993.

சிலப்பதிகாரம் மூலம் உரை – உரையாசிரியர் நாவலர் பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் முல்லை நிலையம் மறுபதிப்பு 2018.

முத்தொள்ளாயிரம் மூலமும் உரையும் – உரையாசிரியர் கவிஞ்சர் பத்மதேவன், ஸ்ரீ செண்பகா பதிப்பகம் 2021.

தென்னிந்திய கிராம தெய்வங்கள் – ஆசிரியர் மாமறைத்திரு கென்றிக் ஒயிட்ஹெட் தமிழில் வேட்டை .எஸ். கண்ணன். சந்தியா பதிப்பகம் இரண்டாம் பதிப்பு 2016.

மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்- ஆசிரியர் முனைவர்
சி. மௌனகுரு, விபுலம் வெளியீடு 1998.

நேர்காணல் - முனிவர் சி.மௌனகுரு , கார்த்திகை 2022

நேர்காணல் - முனைவர் சே.இரகுராமன் மார்கழி 2023